Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 29, 2021

புதன்கிழமை டிசெம்பர் 29, 2021 | ஒளி: 07 கதிர்: 191 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

# மொட்டுவின் பட்ஜெட் 2/3 ஆல் தோல்வி

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியதிகாரத்தின் கீழிருக்கும் ஜா-எல நகர சபையின், 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடையச் செய்யப்பட்டுள்ளது.

பட்ஜெட்டுக்கு ஆதரவாக ஐந்து வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன. எதிராக 10 வாக்குகள் கிடைத்துள்ளன.

தொடர்ச்சி P2



# கடுப்பாகியுள்ள மக்கள் வெடிக்கத் தொடங்குவர்

**ரணில் எச்சரிக்கை: பாராளுமன்றை பாதிக்கும் என்கிறார்**

நாட்டில் டொலர் பிரச்சினை மிகவும் மோசமாக மாறியுள்ளது. அதன் சுமையை மக்கள் சுமக்க முடியாத நிலைக்கு வந்துள்ளனர் எனத் தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விசேடமாக வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதுடன், வேலைவாய்ப்பு திண்டாட்டம் அதிகரித்துள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

உச்சக்கட்ட மோதலில் பங்காளிகள்;

# எந்நேரத்திலும் நீக்கலாம்

**ஜனாதிபதி கூறியதற்கு உதய கம்மன்பில பதிலடி**



**'யுகதனவி தொடர்பில் அமைச்சரவையில் பத்திரம் தாக்கலோ கலந்துரையாடலோ இடம்பெறவில்லை**

**நாட்டை நேசிப்பது தவறில்லை; இதனால் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகவில்லை**

யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு உண்மையை எடுத்துக் கூறியதற்காக, தங்களது பதவிகளை ஜனாதிபதி பறிப்பாராக இருந்தால் அது தொடர்பில் கவலைப்படப் போவதில்லை எனத் திட்டவட்டமாக தெரிவித்த அமைச்சர் கம்மன்பில, அமைச்சுப் பதவிகளை விட நாட்டைப் பாதுகாப்பதே முக்கியமெனவும் ஜனாதிபதிக்கு பதிலளித்துள்ளார். வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோர் அமைச்சரவையில் யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக உயர்நீதிமன்றம் சென்றிருப்பது, அந்தத் தீர்மானத்தை விமர்சித்தமை ஆகியன தவறென, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

இந்த அரசாங்கத்துக்கு

# மன்னிப்பே சிக்கலானது



**மைத்திரி தெரிவிப்பு: தனக்கு நன்றாகவே தெரியும் என்கிறார்**

சர்வதேச உறவு என்பது மிகவும் விரிவான, பரந்த விடயமாகும். இன்றைய தொழில்நுட்ப உலகில், வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் உலகில் நாடொன்றின் முன்னேற்றத்துக்கு சர்வதேச உறவே முக்கிய காரணமாக அமைந்துள்ளது என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

தொடர்ச்சி P2

ஒரே நாடு, ஒரே சட்டத்தை உருவாக்குவதற்கு

# கோட்டாவுக்கு இயலாவிடின் புதிய ஜனாதிபதி வருவார்



ஒரே நாடு, ஒரே சட்டத்தை உருவாக்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முடியாது போகுமாயின் ஜனாதிபதி ஒருவரை எதிர்காலத்தில் உருவாக்கியேனும் அச்சட்டத்தை நிறைவேற்றப்போவதாக, 'ஒரே நாடு- ஒரே சட்டம்' ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டின் முன்னாள் தலைவர்கள் எவரும் 'ஒரே நாடு-ஒரே சட்டம்' தொடர்பில் இதற்கு முன்னர் சிந்தித்ததும் கிடையாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் எதிர்காலத்துக்காக சில நல்ல விடயங்களை செய்து வருகிறார் என்றார்.

தொடர்ச்சி P2

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான

# கால அவகாசத்தை நீடித்தது பங்களாதேஷ்

பங்களாதேஷ் வங்கியிடம் இருந்து இலங்கை பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் உடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் மூன்று தவணைகளின் அடிப்படையில் 200 மில்லியன் டொலர் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

ஒகஸ்ட் 19 ஆம் திகதி 50 மில்லியன் டொலரும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி 100 மில்லியன் டொலரும் செப்டெம்பர் 21ஆம் திகதி 50 மில்லியன் டொலரும் செலுத்துமாறு தவணைகள் வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச சபை விசேட அமர்வில்

# கூச்சல், குழப்பம், அமைதியின்மை

**தவறுக்கு மன்னிப்பு கோரினார் தவிசாளர்**


நிதர்சன் விநோத்

யாழ்ப்பாணம், வேலணை பிரதேச சபையின் நேற்றைய (28) விசேட அமர்வில் அமைதியின்மை ஏற்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வசமுள்ள, வேலணை பிரதேச சபை விசேட அமர்வு தவிசாளர் நவசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

பிரதேச சபைக்குச் சொந்தமான வேலணை, வங்களாவடி கடைத்தொகுதியின் வேலைகளை முன்னெடுப்பதற்கு சபையின் நிலையான வைப்பில் இருக்கும் நிதியை மீளப்பெறுவதற்கு சபை உறுப்பினர்களிடம் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கே, இந்த விசேட கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



# பசியும் பட்டனியுமே மிச்சம்

நாட்டின் பச்சிளம் குழந்தைகளுக்கு பால்மாக்களை இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லாத நிலை காணப்படும்போது, அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் வெளிநாடு செல்வதற்கு மாத்திரம் டொலர் எவ்வாறு கிடைத்தது என்பதை நாட்டு மக்களுக்கு அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# பந்தால் பறிபோன சிறுவனின் உயிர்



மெதிரிகிரிய குசும்பொகுன பிரதேசத்தில் பாதுகாப்பாற்ற கிணற்றில் விழுந்து 09 வயதான சமந்த கவிந்து சந்துருவன் என்ற சிறுவன் உயிரிழந்துள்ளார். அவர், நான்காம் வகுப்பில் கல்விபயின்று வருகின்றார்.

அந்த சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த பந்து இரண்டு நாள்களுக்கு முன்னர், பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்துள்ளது. இதனை எடுத்துத் தருமாறு பலதடவைகள் அவரது தந்தையிடம் கேட்டுள்ளார். எனினும் இதனை தந்தை மறந்துவிட்டார்.

சிறுவனின் தாய், மற்றுமொரு சகோதரனுடன் அருகிலுள்ள வீடொன்றுக்கு சென்றபோது, கிணற்றில் வீழ்ந்திருந்த பந்தை எடுக்க அச்சிறுவன் முயற்சித்துள்ளார். இதன்போதே, தவறிவிழுந்து சிறுவன் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



# 2 கப்பல்கள் வந்துள்ளன; தட்டுப்பாடும் நீங்கும்

**லிட்ரோ நிறுவனம் நம்பிக்கை**

நாளாந்த சமையல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக தேவைப்படும் எரிவாயுவை கூடிய விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது நாளாந்த எரிவாயு தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் எரிவாயுவை ஏற்றிய 02 கப்பல்கள், சிலிண்டர்களுக்கு எரிவாயு நிரப்பும் நிலையங்களை வந்தடைந்துள்ளன என லிட்ரோ நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தையின் தேவைகளில் 80 சதவீதமான எரிவாயுவை லிட்ரோ நிறுவனம் விநியோகிக்கின்றது. நுகர்வோர் விவகார அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் தயாரிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# தப்பியோடிய கைதி நீரில் மூழ்கி பலி

பல்லேகல சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் இருவர் தப்பியோட முயற்சிக்கும்போது ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, மற்றொருவர் தப்பியோடிவிட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தப்பியோடிய இரு கைதிகளும் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் ஊடாக நீந்தித் தப்ப முயற்சித்துள்ளனர். அதிலொரு கைதி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். மற்றைய கைதி, தப்பியோடியுள்ளார்.

ஹெரோய்ன் போதைப்பொருள் தம்வசம் வைத்திருந்தமை,

தொடர்ச்சி P2

# கொரோனாவிலிருந்து மக்களை பாதுகாத்த தலைவர் கோட்டா

**ஜோன்ஸ்டன் தெரிவிப்பு: வரலாற்றில் தடம் பதிப்பார் என்கிறார்**

கொரோனா தொற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாத்த சிறந்த 10 தலைவர்களுள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் இருப்பதாகத் தெரிவித்த நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, எனவே, கொரோனா தொற்றிலிருந்து மக்களை பாதுகாத்த தலைவராக அவர் வரலாற்றில் தடம் பதிப்பார் என்றார்.

தொடர்ச்சி P2

# மலையக ஆசிரிய உதவியாளர்களே சேவை நியமனத்தை கோருகின்றனர்

**வேலுகுமார் தெரிவிப்பு: வங்குரோத்து அரசியல் தலையீடு எதற்கு?**

தகைமையைப் பூர்த்திசெய்த மலையக ஆசிரிய உதவியாளர்களே, ஆசிரிய சேவைக்கான நியமனத்தை கோருகின்றனர். அதற்கு யாருடைய காலடியிலும் மண்டியிட வேண்டிய அவசியம் இல்லை என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தின் ஆசிரிய உதவியாளர்களை ஆசிரிய சேவைக்கு உள்வாங்கும் விவகாரம், கடந்த இரு வருடங்களுக்கு அதிகமான காலம் இழுபறி நிலையில் உள்ளது. அவர்களின் நியமனம் தொடர்பாக கல்வி அமைச்சர் உட்பட அனைத்து அதிகார மட்டத்தில் உள்ளவர்களுக்கும் நாம் வலியுறுத்தி வந்திருக்கின்றோம் என்று தெரிவித்தார். கண்டியில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது: பாராளுமன்றத்தில் பல தடவைகள் இப்பிரச்சினையை சுட்டிக்காட்டி இருக்கின்றோம். அதனடிப்படையில் கடந்த 15 ஆம் திகதி, 306 பேருக்கான நியமங்கள் வழங்குவதற்குரிய கடிதம் அனுப்பப்பட்டது. எனினும், அரச தரப்பில் உள்ள மலையக பிரதிநிதிகளின் தலையீட்டால் மீண்டும் இந்நியமனம் வழங்கல் பிற்போடப்பட்டிருக்கின்றது. தமது அரசியல் வங்குரோத்து நிலையை மூடி மறைப்பதற்கு



இந்நியமனத்தையும் ஒரு கருவியாக பயன்படுத்தும் செயற்பாடே இதுவாகும். தகைமைகளை பூர்த்திசெய்த மலையக ஆசிரிய உதவியாளர்களே, ஆசிரிய சேவைக்கான நியமனத்தை கோருகின்றனர்.

தொடர்ச்சி P2

நிறைகுறைந்த சிறுவர்கள் பட்டியலில்

# இலங்கையும் உள்ளடக்கம்

5 வயதுக்கு குறைந்தவர்களில் உயரத்திற்கு ஏற்ற நிறை காணப்படாதவர்களே உலக சுகாதார ஸ்தாபனத்தால் குறைந்த நிறையுடையவர்களாக கருதப்படுகின்றனர். அந்த வகையில், குறைந்த நிறையுடைய சிறுவர்கள் காணப்படும் நாடுகளில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இலங்கை, இந்தியாவில் குறைந்த நிறை உடையவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கடுப்பாகியுள்ள மக்கள் வெடிக்கத் தொடங்குவர்

விவசாயிகள் செய்தவறியாது தவிக்கின்றனர். எனவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியான தீர்வு அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்கு உலக நாடுகள் அனைத்தும் முகம் கொடுத்திருந்தாலும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பல நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தை காட்டியுள்ளதால், நாமும் இந்த பிரச்சனையை தீர்க்கவேண்டும் என வலியுறுத்தினார்.

எனவே, அரசாங்கத்துக்கு கடமையொன்று உள்ளது உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவது. அல்லது இதற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்று தீர்வொன்றை முன்வைப்பதற்கு. ஆனால் இரண்டும் நடக்கவில்லை. இதனால் மக்கள் கடுப்பில் இருக்கின்றனர்.

இந்த நாட்டில் உணவு தட்டுபாடு ஒன்று ஏற்படவுள்ளதாக பலரும் எச்சரிக்கின்றனர். கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைய தமிழ்- சிங்கள புத்தாண்டு காலத்தில் நாட்டில் உணவுத் தட்டுபாடு ஏற்படும். ஏனெனில்,நாட்டின் பல பிரதேசங்களில் பெரும்போக அறுவடை ஏனைய பெரும்போக அறுவடைகளை விட 60 சதவீதமே இம்முறை கிடைத்துள்ளது.

> **தற்போது அரசாங்கம் கடனுக்கு எரிபொருள் மற்றும் உணவுப்பொருள்களை கொள்வனவு செய்ய இந்தியாவுடன் கலந்துரையாடலை முன்னெடுக்கின்றது. அந்த கலந்துரையாடலை உடனடியாக நிறைவு செய்யவும் என்றார். அதேபோல் இதற்காக இந்தியாவுடன் செய்துகொள்ளவுள்ள ஒப்பந்தங்களையும் நிறைவுசெய்யுங்கள்**

இந்த நிலை ஏற்பட்டால் முகம் கொடுக்க கூடிய அரசியல் பின்னணி குறித்து யோசிக்க வேண்டும் என தெரிவித்த அவர், கடுப்பாகியுள்ள மக்கள் வெடிக்கத் தொடங்குவர். அவ்வாறு அவர்களின் கோபம் வெடிக்கும் போது, அது அரசாங்கத்தையும் பாராளுமன்றத்தையும் பாதிக்கும் என்றார்.

எனவே, நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின் அதனைத் தடுப்பது அவசியம். தற்போது அரசாங்கம் கடனுக்கு எரிபொருள் மற்றும் உணவுப்பொருள்களை கொள்வனவு செய்ய இந்தியாவுடன் கலந்துரையாடலை முன்னெடுக்கின்றது. அந்த கலந்துரையாடலை உடனடியாக நிறைவு செய்யவும் என்றார்.அதேபோல் இதற்காக இந்தியாவுடன் செய்துகொள்ளவுள்ள ஒப்பந்தங்களையும் நிறைவுசெய்யுங்கள் என்றார்.

எரிபொருள், உணவுப் பொருள்களை கடனுக்கு கொள்வனவு செய்வதால் வெளிநாட்டு கையிருப்பு பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. எனினும் தற்போதைய பிரச்சினைக்கு இது தற்காலிக தீர்வாக அமையும் என்றார்.

## கொரோனாவிலிருந்து மக்களை பாதுகாத்த தலைவர் கோட்டா

பதுளை- செங்கலடி வீதியின் பிபிலையிலிருந்து செங்கலடி வரையான 87 கிலோமீற்றர் வீதியை மக்கள் பாவனைக்காக நேற்று (28) கையளித்து உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சகல நாடுகளிலும் பொருளாதார பிரச்சினை எற்பட்டது. சகல நாட்டு தலைவர்களினதும் ஒரே எதிர்பார்ப்பு கொரோனாவிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது பாரிய சவாலாக காணப்பட்டது. எனவே அந்த சவாலுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து, முழு நாடும் உள்ளடக்கும் வகையில் அனைவரையும் பாதுகாத்த புண்ணியம் அவரையே சாரும் என்றார்.

ஆனால் தடுப்பூசி செலுத்தும் செயற்பாட்டுக்கு எதிர்க்கட்சியிடமிருந்து எவ்வித ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை என தெரிவித்த அவர், தடுப்பூசி திட்டத்தை குழப்புவதற்கே எதிர்க்கட்சி எப்போதும் முயற்சித்தது என்றார்.

இதேவேளை, ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்கு, ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்கு பாரிய அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். அந்த வேலைத்திட்டத்தையே இன்று நாம் முன்னெடுத்துள்ளோம் என்றார்.

எனவே 3 வருடங்களில் அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கையை மாற்றி, இலங்கை வரலாற்றில் இடம்பிடிக்க செய்வோம் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளது என்றார்.

# எந்நேரத்திலும் நீக்கலாம்

ஜனாதிபதியின் இந்த கூற்று தொடர்பில் ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தெரிவித்த அவர், யுகதனவி தொடர்பில் அமைச்சரவையில் பத்திரம் எதுவும் தாக்கல் செய்யப்படவோ, அமைச்சரவையில் கலந்துரையாடவோ இல்லை. இந்த விவகாரத்தில் நாட்டு மக்களுக்கு நாம் உண்மையை மாத்திரமே எடுத்து கூறினோம் என்றார்.

எனவே, நாம் எந்தத் தவறுகளையும் செய்யவில்லை. நாட்டை நேசிப்பது தவறென நாம் நினைக்கவில்லை. இதனால் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகுவதற்கான அவசியம் எமக்கு கிடையாது எனவும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

தவறுகள் செய்திருந்தாலேயே நாம் பதவி விலக வேண்டும். நாம் தவறுகள் செய்ததாக எவரும் நினைப்பார்களாக எனின், ஜனாதிபதி எங்களது பதவிகளை பறிப்பாராக இருப்பாராயின் அவை தொடர்பில் எமக்குப் பிரச்சினை இல்லை என்றார்.

எமது அமைச்சுப் பதவிகள் பறிப்போகும் என்கிற ஆபத்தை அறிந்துகொண்டே நாம் யுகதனவி மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் நாட்டுக்கும் நீதிமன்றத்துக்கும் உண்மையை கூறினோம். அமைச்சுப் பதவிகளை வகிப்பதைக் காட்டிலும் நாட்டைப் பாதுகாப்பதே எமக்கு முக்கியம் என்றார்.

## கூச்சல், குழப்பம், அமைதியின்மை

இதன்போது, சபையின் தற்போதய ஆட்சியாளர்களின் அசமந்த போக்கு காரணமாகவே வேலைகள் இதுவரை நிறைவடையவில்லை என உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

தொடர்ந்து உறுப்பினர்களின் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்ட தவிசாளர் நடந்த தவறுக்கு மன்னிப்பு கோரியதை அடுத்து நிலையான வைப்பில் உள்ள நிதியை மீளப்பெறுவதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக அனுமதி வழங்கியிருந்தனர்.

இரண்டு கட்டங்களாக கட்டுமான பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டது. அதில் முதலாவது கட்டட வேலைகள் கடந்த மாதம் 28 ஆம் திகதி நிறைவடையும் என கூறப்பட்ட போதும் இன்றுவரை நிறைவடையாமல் இருக்கின்றது.

விலையேற்றம் காரணமாகவே வேலைகளை முழுமையாக முடிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. எனினும், அதனை சில உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளாவில்லை.

இதனையடுத்தே, சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இன்றைய சபை அமர்வுக்கு ஊடகவியலாளர்கள் சென்றபோது விசேட அமர்வுகளுக்கு ஊடகவியலாளர்களை அனுமதிக்க முடியாதென தவிசாளர் உள்ளிட்ட சில உறுப்பினர்கள் கூறியிருந்தார். தவிசாளரின் கருத்துக்கு இன்னும் சில உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டாவுக்கு இயலாவிடின் புதிய ஜனாதிபதி வருவார்

ஜனாதிபதியின் இவ்வாறான திட்டங்கள் மக்களுக்கு தெரியுமா என்பதில் பிரச்சினைகள் உள்ளன. எவ்வாறாயினும் நாட்டு மக்களிடத்தில் தற்போது பட்டணி, சமையல் எரிவாயு மற்றும் உரம் உள்ளிட்ட பிரச்சினைகளே காணப்படுகின்றன என்றார்.

ஒரே நாடு- ஒரே சட்டம்' எனும் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் ஜனாதிபதி ஒருவரை உருவாக்கியேனும் ஒரே நாடு, ஒரே சட்டத்தை சட்டமாக்குவோம் என்றார்.

மேலும், 'ஒரே நாடு, ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தேவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உள்ளது. எனவே இதனை ஜனாதிபதியால் வெற்றிகொள்ள முடியும். அதற்கான அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கிறது. எனவே, இதனை ஜனாதிபதி செய்து முடிப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

## தப்பியோடிய கைதி நீரில் மூழ்கி பலி

போதைப்பொருளை பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக கைதிகள் இருவருக்கும் ஒரு வருட சிறைதண்டனை விதிக்கப்பட்டு, புனர்வாழ்வுக்காக பல்லேகல சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

இச்சம்பவத்தில் 34 வயதுடைய பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவர், என்றும் தப்பியோடியவர் மினுவாங்கொடையை சேர்ந்தவர் என்றும் விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

## 2 கப்பல்கள் வந்துள்ளன தட்டுப்பாடும் நீங்கும்




இதனிடையே, இதற்கு முன்னர் சந்தைக்கு விநியோகிக்கப்பட்ட நீலம் மற்றும் கறுப்பு நிற முத்திரையிடப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கான தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளதாக நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்காலங்களில் தாமதமின்றி எரிவாயுவை வழங்கும் இயலுமை தமது நிறுவனத்துக்கு உள்ளதாக லிட்ரோ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## இலங்கையும் உள்ளடக்கம்

பப்புவா நியூகினியா, மாலைதீவு, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் குறைந்த நிறையுடையவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று பரவல் காரணமாக குறித்த நாடுகளில் குறைந்த நிறையுடைய சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

உணவு பாதுகாப்பு மற்றும் போசனைக் குறைபாடு காணப்படுகின்ற நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

> **உணவு பாதுகாப்பு மற்றும் போசனைக் குறைபாடு காணப்படுகின்ற நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, உணவுப் பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குகிறது**

இதேவேளை, உணவுப் பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரிக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மொட்டுவின் பட்ஜெட் 2/3 ஆல் தோல்வி

இதனால், மேலதிக வாக்குகளால் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

நேற்று (28) நடைபெற்ற இந்த வரவு-செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பின் போது, அத்திட்டத்துக்கு எதிராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஐவர் வாக்களித்துள்ளமை விசேட அம்சமாகும்.

## மன்னிப்பே சிக்கலானது

ஆனால் இன்று நாம் சர்வதேச உறவுகளுடன் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை அனைவரும் புரிந்துக்கொள்வர்.

நாட்டின் இன்றைய நிலையில், அனைவரிடத்திலும் பேசும் பொருளாக உள்ள விடயமே சர்வதேச நாணய நிதியமும் ஏன் சர்வதேச நாணய நிதியத்தை இலங்கை நாடவில்லை என்பது குறித்தே சகலரும் கதைக்கின்றனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடியை தீர்க்க ஏதாவதொரு நிவாரணம் அங்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் சிந்திக்கும் போது, அதிகார தரப்பினர் இல்லை. நாம் சர்வதேச நாணய நிதியத்தை நாடமாட்டோம் என்கின்றனர்.

நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் ஒன்றரை மாதங்களை தவிர அனைத்து காலங்களும் சர்வதேச நாணய நிதியத்துடனேயே இணைந்து செயற்பட்டோம். ஆனால் சர்வதேச நாணய நிதியம் எனக்கு எந்தக் காலத்திலும் கடுமையான நிபந்தனைகளை விதிக்கவில்லை.

அதேபோல் அவர்கள் விதித்த ஒரு சில கடுமையான சில நிபந்தனைகள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடியதுடன், இந்த நிபந்தனைகளை ஏற்றக்கொண்டால் நாட்டில் பாரிய நெருக்கடி ஏற்படும், மக்களின் அதிருப்தியை சந்திக்க நேரிடும் என சுட்டிக்காட்டியதை ஏற்றுக்கொண்டு அந்த நிபந்தனைகளை நீக்கிகொண்டனர் என்றார்.

ஆனால், எனக்கு விதிக்காத நிபந்தனைகள், இந்த அரசாங்கத்துக்கு விதிப்பர் என எனக்கு நன்றாக தெரியும்.

பிரதானமாக எமக்கு நிதியுதவி செய்யும் நிதி நிறுவனங்கள், இலங்கையின் நிலையை நன்கு அவதானித்து, அந்த நாடுகளின் ஜனநாயகம், மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றதா, நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுகின்றதா போன்ற விடயங்களை ஆராய்ந்தே நிதியுதவி வழங்குவர்.

ஆனால் குற்றவாளிகளான சில முக்கிய பிரமுகர்கள், இந்த அரசாங்கத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இதுபோன்ற விடயங்களை தான் சர்வதேசம் கண்காணிக்கும். எமக்கான புள்ளிகள் இதன்மூலம் தான் கிடைக்கும் என்றார்.

## கால அவகாசத்தை நீடித்தது பங்களாதேஷ்

பங்களாதேஷ் வங்கியிடம் இருந்து இலங்கை பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக குறித்த கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் உடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் மூன்று தவணைகளின் அடிப்படையில் 200 மில்லியன் டொலர் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் 19 ஆம் திகதியன்று 50 மில்லியன் டொலர்களையும் 100 மில்லியன் டொலர் இரண்டாவது தவணை ஒகஸ்ட் 30 ஆம் திகதியன்றும் இறுதி தவணை செப்டம்பர் 21ஆம் திகதியன்றும் 50 மில்லியன் டொலர்களும் செலுத்துமாறு தவணைகள் வழங்கப்பட்டன்

> **பங்களாதேஷுக்கு கடன் தொகைக்கு வட்டியாக 2 சதவீதத்தை இலங்கை அரசாங்கம் செலுத்தவேண்டும். ஆறு மாதங்களுக்குப் பின்னரும் தவணை நிதி செலுத்தப்படாமல் இருந்தால், 2.5 சதவீதம் மற்றும் கடன் தொகை திருப்பிச்செலுத்த வேண்டும்**

பங்களாதேஷுக்கு கடன் தொகைக்கு வட்டியாக 2 சதவீதத்தை இலங்கை அரசாங்கம் செலுத்தவேண்டும். ஆறு மாதங்களுக்குப் பின்னரும் தவணை நிதி செலுத்தப்படாமல் இருந்தால், 2.5 சதவீதம் மற்றும் கடன் தொகை திருப்பிச்செலுத்த வேண்டும் இதுவே, இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தமாகும்.

## பசியும் பட்டினியுமே மிச்சம்

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார, நாட்டு மக்களுக்கு அத்தியாவசியமான மருந்து பொருள்களைக்கூட இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லை. ஆனால் அரசியல்வாதிகள் குடும்பங்களுடன் வெளிநாடுகளுக்கு செல்ல, வெளிநாடுகளில் உள்ள கோவில்களுக்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள டொலர் இருப்பதாகவும் கூறினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான இடதுசாரி அரசாங்கங்கள் நாட்டில் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் நாட்டு மக்களுக்கு பசியும், பட்டினி மாத்திரமே கிடைப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மலையக ஆசிரிய உதவியாளர்களே சேவை நியமனத்தை கோருகின்றனர்

அதற்கு யாருடைய காலடியிலும் மண்டியிட வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

2015 ஆம் ஆண்டு, அமைச்சரவை தீர்மானத்தின் படி, மலையக தோட்ட பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது. அதன் போது, மாதமொன்றுக்கான கொடுப்பனவு ரூபாய் 6,000 மட்டுமே வழங்கப்பட்டது. அதன் பின்னர் அத்தொகை ரூபாய் 10,000 ஆக அதிகரிக்கப்பட்டது. ஆசிரிய உதவியாளர்கள் தமது பயிற்சிகளை பூர்த்திசெய்து, தகைமைகளை முழுமைப்படுத்துகின்ற போது, உடன் ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்படல் வேண்டும் என்றார்.

அதன் அடிப்படையில் ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரியர் சேவை நியமனம் பெற்றுள்ளனர். அவர்களுக்கு காலதாமதமான காலத்திற்குரிய நிலுவை கொடுப்பனவும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தில் ஒரு பகுதியினருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவர்களுக்கான நிலுவை கொடுப்பனவு எதுவும் இதுவரையும் வழங்கப்படவில்லை. அது மட்டுமன்றி எஞ்சியுள்ள நியமனங்கள் இதுவரையும் வழங்கப்படவில்லை. இன்று ஆசிரிய உதவியாளர்கள் தமது நியமனத்தை பெறுவதற்கு வீதிகளில் இறங்க வேண்டிய நிலைமையை தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அழுத்தங்களை தாங்கத் தயாராயின்

# செல்ல நாம் தயார்

சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் யோசனைகளின் அழுத்தங்களை, மக்கள் தாங்கிக் கொள்ள தயாராக இருப்பார்களாக இருந்தால், சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல அரசாங்கம் தயாராக இருப்பதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் சென்ற நாட்டையே, நாம் 2014ஆம் ஆண்டு ஒப்படைத்தோம். எனினும், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய செய்தது.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டும் என்கிறார்கள். கடந்த அரசாங்கமும் அங்கு சென்று கடனைப் பெற்றுகொண்டதால் எரிபொருள் விலை சூத்திரம், எரிவாயு, பால்மாக்கள்



உள்ளிட்ட பொருள்களின் விலைகள் கடந்த அரசாங்கத்தில் அதிகரித்தன.

மக்கள் விரும்பினால், சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதில் அரசாங்கத்துக்குப் பிரச்சினைகள் இல்லை. 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றிருக்கிறோம். குறிப்பாக நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு குறையும்போது 11 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருக்கிறோம்.

இறுதியாக, ஐக்கிய தேசிய கட்சி, நாணய நிதியத்திடம் சென்றிருந்தது. இதனால் 2016 - 2019ஆம் ஆண்டுவரையில் நாணய நிதியத்தின் பிடியிலேயே இலங்கை இருந்தது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் யோசனைகள் சரியானதே. எனினும் இலங்கை போன்ற நாடுகளில் அந்த யோசனைகளை நடைமுறைப்படுத்தும்போது, மக்கள் பாரிய அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். எவ்வாறாயினும் மக்கள் இந்த அழுத்தங்களை தாங்கிக்கொள்ள தயாராக இருப்பார்களாக இருந்தால், நாணய நிதியத்திடம் செல்ல அரசாங்கம் தயாராக இருக்கிறது எனவும் கூறினார்.

## “டொலர் பிச்சை எடுக்கிறது அரசாங்கம்”



அரசாங்கம் தனது இயலாமையை மூடிமறைக்க, அமைச்சுகளின் செயலாளர்களை, ஜனாதிபதி மாற்றிக்கொண்டு வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சுகளின் செயலாளர்களையோ அல்லது ஜனாதிபதியின் செயலாளரையோ மாற்றுவதை நாட்டு மக்கள் எதிர்பார்க்கவில்லை. நாட்டு மக்கள், மூவேளை உண்ண முடியாத நிலைக்கு வந்துள்ளனர்.

உரம் இல்லாததால் விவசாயிகள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதியின் செயலாளரை மாற்றுவதால் இப்பிரச்சினைகள் தீர்ந்துவிடபோவதில்லை. 2022ஆம் ஆண்டு நிறைவடையும்போது சுற்றுலாத்துறையின் ஊடாக 3.5 பில்லியன் டொலர்கள் நாட்டுக்குக் கிடைக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் சிரித்துகொண்டே கூறுகிறார். ஆனால், உண்மையில் அரசாங்கம் டொலர்களுக்காக வெளிநாடுகளில் பிச்சை எடுக்கிறது.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர், ஆட்சி செய்த எந்தவோர் அரசாங்கமும், தற்போதைய அரசாங்கம்போல வெளிநாடுகளுக்கு சென்று டொலர் பிச்சை எடுத்ததில்லை எனவும் அவர் கூறினார்.

## பகிர்ந்தளிப்பு...



பாகிஸ்தான் பதில் உயர் ஸ்தானிகர் தன்வீர் அஹமட் தலைமையில் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட கொண்டாட்டத்துக்கான கேக் வெட்டப்பட்டது. இந்நிகழ்வு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று (28) நடைபெற்றது.

## ‘சன்ஷைன்’ கொலை; சாரதி கைது

‘சன்சைன் சுத்தா’ என்றழைக்கப்படும் அமில பிரசங்க ஹெட்டிஹேவாவின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான ‘டிங்கர்’ லசந்தா வானில் பயணித்த போது, கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தம்புத்தேகம பிரதேசத்தில் வைத்து அவர், கைது செய்யப்பட்டதாக கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற விசாரணை பிரிவு தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர், வானின் சாரதி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து ஒட்டோ, அலைபேசி, 102,000 ரூபாய் ரொக்கப் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அவர், மட்டக்குளியை சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



அரசாங்கத்தின் இயலாமையால்

## பொருட்களுக்குத் தட்டுப்பாடு வரும்



அரசாங்கத்தின் இயலாமையால் எதிர்காலத்தில் எரிபொருள், மின்சாரம் தட்டுப்பாடு ஏற்படுமெனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா, இதனை தடுக்க அரசாங்கத்திடம் திட்டங்கள் இல்லை என்றார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றைப் பெற்றுக்கொள்வதாக இருந்தால், அதற்காக 4, 5 மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலையே நாட்டில் ஏற்பட்டுள்ளது. காஸ் சிலிண்டரை பெற்றுக் கொண்டதன் பின்னரும் இந்தச் சிலிண்டர் எப்போது வெடிக்கும் என்கிற அச்சத்திலேயே வாழ வேண்டிய நிலை உள்ளது.

இந்த அரசாங்கத்தின் இயலாமையால் எதிர்காலத்தில் எரிபொருள், மின்சாரம், தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படப்போகிறது. இது தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எந்தவிதமான முன்னேற்பாடுகளையும் எடுக்கவில்லை எனவும் கூறினார்.

# ஐந்தாவது நாளாக இலவச பயணம்

■ எம்.இஸட்.ஷாஜஹான்

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் ஐந்தாவது நாளாகவும் பயணச் சீட்டின்றி மக்கள் பயணம் செய்துள்ளனர்.

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் ஐந்தாவது நாளாக மேற்கொண்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் நேற்று (28) பயணச்சீட்டு விநியோகிக்கப்படவில்லை; பொதிகளும் பொறுப்பேற்றுக்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

பயணச்சீட்டு விநியோகிக்கப்படாமை காரணமாக, அச்சத்துடன் ரயிலில் பயணம் செய்ய வேண்டியுள்ளதாக பயணிகள் பலரும் தெரிவித்தனர்.



ஜே.வி.பியுடன் சுதந்திரக் கட்சி கூட்டணி;

## தயாசிறியின் தனிப்பட்ட கருத்து



மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே.வி.பி) கூட்டணி அமைப்பது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்த கருத்துகள் அவரது தனிப்பட்ட கருத்து என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மக்கள் விடுதலை முன்னணியுடன் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைப்பது தொடர்பில் எந்தவிதமான கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. குறிப்பாக, இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்படவில்லை என்றார்.

இதேவேளை, சுதந்திரக் கட்சி, எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி அமைப்பது தொடர்பில் கலந்துரையாடுவதில்லை என்றும் தெரிவித்த அமைச்சர், ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கூறிய கருத்துகள் அவரது தனிப்பட்ட கருத்தாகும்.

எவ்வாறாயினும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கு எவருக்கும் எந்தவிதமான தடைகளும் இல்லை எனவும் அவர் இதன்போது கூறினார்.

ரயில்வே தொழிற்சங்கங்களால்

## தபாலுக்கு பாரிய நட்டம்




ரயில்வே தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக தபால் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளதென ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்திக பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் விநியோகத்தில் ரயில்கள் முக்கிய இடம்வகிக்கின்றன. இவ்வாறான நிலையில் ரயில் தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பால் தபால் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இது தபால் திணைக்களத்துக்குப் பாரிய நிதி நட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. பணிப்பகிஷ்கரிப்பால் அதிக விலைகொடுத்து தபால் சேவைகளை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியம்:

## அமைச்சரவையில் ஒருமித்த கருத்து இல்லை



சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் அமைச்சரவையில் ஒருபொதுவான நிலைப்பாடில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், அடுத்த வார அமைச்சரவை கூட்டத்துக்கு நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் அழைக்கப்பட்டு, நாட்டின் நிதி நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட உள்ளது.

இதற்கு முன்னர் எந்தவோர் அரசாங்கமும் இவ்வாறு நிதி அமைச்சின் செயலாளரையோ அல்லது மத்திய வங்கியின் ஆளுநரையோ அமைச்சரவைக்கு அழைத்ததில்லை.

நாட்டில் இதுபோன்ற பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும்போது உலக வங்கி அல்லது சர்வதேச நாணய நிதியத்தால் மாத்திரமே நிவாரணங்களை வழங்க முடியும். இதுவே நிபுணர்களின் நிலைப்பாடாகவும் இருக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதா? இல்லையா என்பது தொடர்பில் அமைச்சரவையில் ஒருமித்த கருத்து இல்லை. செல்ல வேண்டுமென நிதி அமைச்சர் சொல்கிறார். சர்வதேச நாணயநிதியத்திடம் சென்றால் பதவி விலகுவேன் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகிறார். ஒரு நிலைப்பாட்டுக்கு வர முடியாத அமைச்சரவை தற்போது இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

## ரஞ்சனின் காதலியுடன் சிறைசென்ற எஸ்.பி



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவை பார்ப்பதற்கு, ரஞ்சனின் காதலியை அழைத்துச் சென்றதாக ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ரஞ்சனுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டுமாக இருந்தால், அது தொடர்பில் ரஞ்சன் கோரிக்கை ஒன்றை முன்வைக்க வேண்டும். எனினும் அதுபோன்றதொரு கோரிக்கை இதுவரையில் முன்வைக்கப்படவில்லை. ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிடுவதற்குச் சென்று, சுமார் அரை மணிநேரம் அவருடன் உரையாடியிருந்தேன். நான் தனியாகச் செல்லவில்லை. ரஞ்சன் ராமநாயக்கவின் காதலியுடன் சென்றிருந்தேன். காதலி ஒரு வைத்தியர்; அவர், தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றுகின்றார். என்னுடன், என்னுடைய ஊடகச் செயலாளரும் வருகை தந்திருந்தார்.

ரஞ்சனுக்குப் பொதுமன்னிப்பு வழங்கவேண்டுமென்பது தொடர்பில் கலந்துரையாடவில்லை. எனினும், பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அதன்பின்னரே ஜனாதிபதியிடம் வலியுறுத்த முடியும். எனினும், இதுதொடர்பில் நான், சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன் எனவும் கூறினார்.

## போதைப்பொருளுடன் மூவர் அதிரடிப்படையால் கைது

■ துசித குமார டி சில்வா

அளுத்கம விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில், தர்கா நகரின் பொந்துபிடிய முதலி கம பிரதேசத்தில் 7 இலட்ச ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்த 19 கிராம் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. பொந்துபிடியவைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இதன் பிரதான சந்தேகநபர் எனவும், கைது செய்யப்பட்ட ஏனைய இருவரும் பேருவளை, தர்கா நகரைச் சேர்ந்தவர்கள் எனவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

நீண்ட நாள்களாக இந்தப் போதைப்பொருள் வர்த்தகம் இடம்பெற்று வருவதாகவும், நீண்ட விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### வடக்கு, கிழக்கின் மேல்

# சீனாவுக்கு ஏன் கரிசனை?

கே.எல்.ரி. யுதாஜித்

“இலங்கை அரசாங்கத்தின் உற்ற தோழனாய் இருக்கும் சீனா, தமிழர்களின் விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக, எவ்வாறான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்? வடக்கு, கிழக்கின் மேல் திடீரென சீனாவுக்கு கரிசனை வரக் காரணம் என்ன?” என, தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளருமான பிரசன்னா இந்திரகுமார் கேள்வியெழுப்பியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் சீனாவின் பிரவேசம் தொடர்பில் நேற்று (28) கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரசன்னா இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் பிரசன்னா மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதில், தமிழ் மக்கள் அதிக நம்பிக்கை கொண்ட ஒரு நாடாக இந்தியா இருக்கின்றது. பிராந்திய வல்லரசாகத் திகழும் இந்தியாவின் அனுசரணையுடன் தான் தமிழர்களுக்கான ஒரு தீர்வு கிடைக்கப்பெற முடியும் என்பதும் அரசியலாளர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

அவ்வாறிருக்கையில், நம்மவர்கள் சிலர் சீனாவை நாட வேண்டும் என்று கதைப்பதெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு விடயமாகும். அகிம்சை ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் உரிமைக்கான போராட்டம், ஆயுத ரீதியில் அதியுச்சம் பெற்று, தற்போது ஜனநாயக ரீதியிலான முன்னெடுப்புகளை மேற்கொண்டு செல்லும் நேரத்தில், ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் ஒரு நாட்டையே நாம் அனுசரணையாகக் கொள்ள வேண்டும். சர்வதேச விழுமியங்களை மதித்து செயற்படும் நாடுகளுடனான எமது உறவே, எமது மக்களுக்கான நேர்மையான தீர்வுக்கு வழிவகுக்கும். அதை விடுத்து, சீனாவிடம் செல்வதென்பது முட்டாள் தனமான செயற்பாடாகவே இருக்கும்.



கடன் என்ற பெயரில் நிதியைக் கொடுத்து நாட்டின் வளங்களைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் சீனாவின் ஆதிக்கம் தற்போது வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களிலும் காலூன்ற ஆரம்பித்துள்ளது. இது தமிழர்களின் உரிமை தொடர்பான செயற்பாடுகளுக்குப் பாதகமாகவே அமையும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எவருடனும் பேச்சுவார்த்தை நடத்தலாம். ஆனால், தீர்வு என்ற ஒன்று பெற வேண்டுமானால் அது இந்தியாவினூடாகவேதான் அமையும். சீனாவுடன் பேச வேண்டும் என்று இந்தியாவின் எதிர்ப்பினைப் பெறுவதென்பது எமது மக்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிவிடும். வடக்கு, கிழக்கின் மேல் சீனாவுக்கு திடீரென கரிசனை வரக் காரணம் என்ன?

எமது ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் முறைமையானது தமிழர்களின் அபிலாஷைகளுக்கான ஆரம்பப் புள்ளியாக இருக்கின்றது. இது தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வாக இல்லாவிட்டாலும். இதிலிருந்து அடுத்த அடுத்த கட்டங்களை நோக்கி நாங்கள் முன்நகர வேண்டும். அதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மாத்திரமே வழிவகுக்கும்.

தாகத்தில் இருப்பவனுக்கு தூரத்தில் இருக்கும் கங்கையை விட பக்கத்தில் இருக்கும் குட்டையே மேலானது என்பார்கள். எனவே உரிமையை இழந்து தவிக்கும் மக்களின் உரிமையைப் பெற பக்கத்து தேசத்தை விடுத்து எங்கோ இருக்கும் சீனாவோடு கதைப்பதென்பது வேலிக்குள் இருப்பதை எடுத்து விட்ட கதையாகப் போய்விடும்” என்று தெரிவித்தார்.

### யாழ். பல்கலை முன்னாள் மாணவ பிரதிநிதிகளுக்கு எதிராக

# 30 மாதங்களின் பின் வழக்கு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள் 2019 மே 03ஆம் திகதியன்று, இராணுவத்தினர் நடத்திய தேடுதலின் போது, கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவருக்கும் எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் உள்ள சான்றுப்பொருள்களை பாரப்படுத்துமாறு, கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு மே 3ஆம் திகதியன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்திலும் விடுதிகளிலும், இராணுவத்தினர் பெருமெடுப்பில் சோதனைகளை முன்னெடுத்தனர். நூற்றுக்கணக்கான படையினர் இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதலின் போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் இருந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம், இனப்படுகொலைகள் தொடர்பான சில பதாகைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம்.திவாகரன், அதன் செயலாளர் எஸ்.பபில்ராஜ் ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு, இராணுவ அதிகாரியால் எழுத்து மூல ஆவணமொன்று பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் முன்னிரவு, கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் இருவரும், யாழ்ப்பாணம் நீதவானின் இல்லத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மாணவர்கள் இருவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உப விதிகளின் கீழான ஏற்பாடு மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பட்டயம் ஆகிய நான்கு ஏற்பாடுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அதனால் மாணவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதையடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யும் விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுகளில் மேன்முறையீட்டு நீதிமன்றால் மட்டும் பிணை வழங்கக் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை மீளப்பெறுமாறு, கோப்பாய் பொலிஸாருக்கு சட்ட மா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் 13 நாள்களின் பின்னர் 2019 மே 16ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், சுமார் 30 மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் 2019 மே 3ஆம் திகதியன்று நடத்திய தேடுதலில் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் ஒட்டப்பட்டிருந்தமையை அடுத்து, சிற்றுண்டிச்சாலை நடத்துநர் கைது செய்யப்பட்டு, 12 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பின்னர், அவர் மீதான வழக்கு, பொலிஸாரால் மீளப்பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## இன்னல்களுக்கு உள்ளான நபர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு

நீதி அமைச்சின் இழப்பீடுகளுக்குள்ளான அலுவலகத்தால், இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம் தலைமையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இன்னல்களுக்குள்ளான நபர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு காசோலைகளை வழங்கி வைத்துள்ளார்.

இதன்போது கடந்த காலங்களில் இன்னல்களுக்குள்ளான கோவில்கள் மற்றும் நபர்களுக்காக 25,42,000 ரூபாய் நிதி காசோலைகளாக வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பாதிப்புக்குள்ளான ஏழு கோவில்களுக்கும், உயிரிழப்புக்குள்ளான மற்றும் காயமடைந்த 14 நபர்களுக்கும் மேலும் சொத்துப் பாதிப்புக்குள்ளான ஒன்பது நபர்களுக்கும் நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

### மண்முனை மேற்கில்

# ஆராய்வு கூட்டம்

வ. சக்தி



மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்களுக்கு அடுத்தாண்டில் வழங்கப்படவுள்ள நிதிக்கான திட்டமுன்மொழிவுகள் தொடர்பாக ஆராயும் கூட்டமானது, வவுணதீவு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றது.

இதன்போது இப்பிரதேசத்திலுள்ள 10 வட்டாரங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உட்கட்டமைப்பு, வாழ்வாதாரம் உள்ளிட்ட திட்டங்களின் முன் மொழிவுகளை பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம பிரதிநிதிகள் போன்றோர் இணைந்து திட்டங்களை ஆராய்ந்து சமர்ப்பித்தனர். ஒரு வட்டாரத்துக்கு 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் மேற்படி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சண்முகராஜா, பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில்

# அனல்பறந்த வாதப்பிரதிவாதம்



வி.ரி. சகாதேவராஜா

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா, காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோரிடையே அனல் பறக்கும் வாதப்பிரதிவாதம் இடம்பெற்றது.

காரைதீவின் மேற்கே வயற் பிரதேசத்தில் பிரதேச செயலகம், பிரதேச சபை, நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு தெரியாமல் கார்ப்பட் வீதி அமைக்கும் முயற்சியைக் கண்டித்து ஜெயசிறில் சபையில் உரையாற்றும்போது, இடைநடுவில் அதாவுல்லா குறுக்கிட்டதால் இந்த வாதப்பிரதிவாதம் ஏற்பட்டது.

இதற்கு பதில் அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பதிலளிக்கையில், “இப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக, சகலரையும் இணைத்து குழு அமைத்து, அதன் ஆலோசனைப்படி முடிவெடுக்கப்படும். அதுவரை, சர்ச்சைக்குரிய கார்ப்பட் வீதி அமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.

வாதப்பிரதிவாதம் தொடர்பாக தெரிய வருவதாவது, “எமது காரைதீவு பிரதேசத்தின் அணைக்கட்டு வயல் வீதியை, எம்மிடம் சொல்லாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கார்ப்பட் வீதியாக புனரமைப்பு செய்யவுள்ளது. நாம் அபிவிருத்திக்கு எதிரானவர்களல்ல. ஆனால் எமது முழுக்கிராமமும் பாதிக்கப்படும்போது அதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இம்முறை பெய்த மழையில் காரைதீவு 10, 11, 12ஆம் பிரிவுகள் வெள்ளத்தில் அமிழ்ந்து போயிருந்தன. இந்த பண்ட்வீ தி அமைத்தால் முழுக்கிராமத்திற்கே ஆபத்து” என்று கூறினார்.



### மனைவிக்கு நடைபெற்றது போன்ற துயரச் சம்பவம்

# நடக்கவே கூடாது

## சட்டம் பாடம் கற்பிக்க வேண்டும் என்கிறார் கணவன்

வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

தனது மனைவிக்கு நடைபெற்றது போன்ற துயரச்சம்பவம் இனியொருவருக்கு நடைபெறாத வண்ணம் சட்டம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் மட்டக்களப்பில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரான க. செல்வராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடி பகுதியில் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு அவரது தங்க நகைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (28) இடம்பெற்றது.

குறித்த சம்பவம் தொடர்பான வாக்குமூலம் பெறுவதற்காக கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சீ. றிஸ்வான் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

### அபிவிருத்தி செய்வதற்கு

# எங்களிடம் நிதி இல்லை



சுப்பிரமணியம் பாஸ்கரன்

வெளிநாடுகள் வரும்போது நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் யார் வந்தாலும் நாங்கள் அவர்களை வரவேற்போம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

இரணைமடு குளத்தின் கீழுள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராயும் முகமாக, நேற்று (28), கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரைத்த அவர், இரணைமடு குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள், உழவர் சந்தை அவசியம் தேவை என்பதனை வலியுறுத்தி இருந்தார்கள். அதனை நடைமுறைப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

கௌதாரிமுனை பிரதேசத்தில், காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு யாருக்கும் எந்தக் காணிகளும் வழங்கப்படவில்லை.

எங்களை அபிவிருத்தி செய்வதற்கு நிதி வசதிகள் இல்லை. வெளிநாடுகள் வரும்போது நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் யார் வந்தாலும் அதனை நாங்கள் வரவேற்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

# மேயருக்கு எதிராக போராட்டம்

எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனுக்கு எதிராக, நேற்று (28) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபை முன்றலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் மாநகர சபை உறுப்பினர்களால், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபை அமர்வு இடம்பெற்ற போது, மேயரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, குறித்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்து, மாநகர முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, ‘மேயரின் அராஜகம் ஒழிக’, ‘சபையின் மாண்பைக் காப்பாற்று’, ‘வர்த்தகர்களின் வயிற்றில் அடிக்காதே’ போன்ற கோஷங்கள், எழுப்பப்பட்டன.





# உதவிகள்...

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெண்ணிலா விளையாட்டு கழகத்தின் புனரமைப்புக்காக ஒரு இலட்சம் ரூபாயும் வெற்றிலைக்கேணி சென். பஸ்ரியர் விளையாட்டு கழகம், ஆழியவளை அருணோதயா விளையாட்டு கழகம், உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம், நாகர்கோவில் நாகதீபம் விளையாட்டு கழகம் ஆகியவற்றுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் நிதி ஒதுக்கப்பட்டு, விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில், நேற்று முன்தினம் (27) இந்நிகழ்வு நடைபெற்றது. (படப்பிடிப்பு: எஸ். தில்லைநாதன்)

### கௌதாரிமுனை படுகொலை சம்பவம்:

## பெண் உட்பட நால்வருக்கும் விளக்கமறியல்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பூநகரி, கௌதாரிமுனையில், இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட நான்கு சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம், உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், அன்றைய தினம் (10), அடையாள அணிவகுப்புக்கு, அவர்களை உட்படுத்துமாறும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்களை, நேற்றைய தினம் (28), கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்று பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே, பதில் நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

### குமாரசாமிபுரத்தில்

# அகழ்வுப் பணி ஆரம்பம்

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, குமாரசாமிபுரம் பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (26), செயலிழந்த நிலையில் துப்பாகிகள் உள்ளிட்ட வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், நேற்று (28), மீட்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குமாரசாமிபுரம் பகுதியில் உள்ள ஆரம்ப பிரிவு பாடசாலையின் பின்பகுதியில் உள்ள காணியிலேயே, இவ்வாறு பெருமளவான ஆயுதங்களும் வெடிபொருள்களும் அடையாளம் காணப்பட்டு, மீட்கப்பட்டு வருகின்றன.

இதன்போது, ரி56 ரக துப்பாகிகள், வெடிபொருள்கள் என்பன இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், பிரதேசத்துக்குப் பொறுப்பான இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து குறித்த அகழ்வுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கிகள், வெடிபொருட்கள் ஆகியன துருப்பிடித்து காணப்படுவதாகவும், அவை செயற்றிறன் உள்ளவையா என்பது தொடர்பில் அகழ்வு பணிகள் நிறைவுற்றதன் பின்னர் ஆய்வு செய்யப்பட்டு, நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெடிபொருட்கள் மீட்கப்படும் தனியார் காணியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம் காணப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### இருபது பெருந்தோட்டப் பிரிவுகள்

# இரவோடு கைமாற்றம்

## வடிவேல் சுரேஸ் எம்.பி அம்பலம்

ஹப்புகஸ்தன்னை, உடபுஸ்ஸல்லாவை பிளாஸ்டேசன்கள் பொறுப்பிலிருந்த சுமார் 20 பெருந்தோட்டப் பிரிவுகள், 'பிரவுன்' இன்வெஸ்ட்லென்ட் நிறுவனத்திற்கு இரவோடு இரவாக, மைாற்றம் செய்யப்பட்டுள்ளது என, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பசறைப் பணியக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இதற்கமைய, ஹப்புகஸ்தன்ன பிளாண்டேசன் பொறுப்பிலிருந்த தெமோதரை, உடுவரை, நிவ்பேர்க் நாவலை, டெமேரியா, ஹொப்டன், சோலன்ஸ், அடாவத்தை, பிபிலை, உடபுசல்லாவை பிளாண்டேசன் பொறுப்பிலிருந்த ராகலை உள்ளிட்ட 20 பெருந்தோட்டப் பிரிவுகள் 'பிரவுன்' இன்வெஸ்ட்லென்ட் நிறுவனத்திற்கு கடந்த 22ஆம் திகதி இரவோடு இரவாக கைமாற்றம் செய்யப்பட்டுள்ளன.



சுமார் 20 ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பு கைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 20 பெருந்தோட்டப் பிரிவுகளில் 15 ஆயிரம் தொழிலாளர்கள் தொழில் செய்கின்றனர்.

இவர்கள், பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளளர். இந்தத் தொழிலாளர்களது சட்டபூர்வ கொடுப்பனவுகள், சேவைக்கால பணம், தொழில் உரிமைகள், தொழில் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் பெருந்தோட்டங்களைப் பொறுப்பெற்ற புதிய நிறுவனத்திடம் எதிர்ப்பார்க்க முடியாது. புதிய தொழிலாளர்களாகவே அத் தொழிலாளர்கள் தொழில் செய்ய வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

இத்தோட்டங்கள் கைமாற்றப்பட்ட விடயத்தை, பாராளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. மாகாண சபைகள் இயங்காதலால் மாகாண சபைகளிலும் குரல் எழுப்ப முடியாமலுள்ளது. எனவே, பெருந்தோட்டங்களின் இக் கைமாற்றத்தை வன்மையாகக் கண்டித்து, ஜனவரி மாதம் 2ஆம் திகதி, பதுளை, பசறை, நுவரெலியா ஆகிய இடங்களில் பாரிய தொழிலாளர் போராட்டங்களை நடத்த திட்டமிட்டுள்ளோம். பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் அனைத்தும் இதயசுத்தியுடன் இப் போராட்டத்தில் ஈடுபடும்படி அறைகூவல் விடுக்கின்றேன் என்றார்.

# அம்பியூலன்ஸ் விபத்து அறுவர் காயம்

## ஒருவரின் நிலை கவலைக்கிடம்

சுமணசிறி குணதிலக




புத்தல பிரதேச வைத்தியசாலையிலிருந்து மொனராகலை மாவட்ட வைத்தியசாலைக்கு மூன்று நோயாளர்களுடன் பயணித்த அம்பியூலன்ஸ் வண்டியொன்று, கும்புக்கன பிரதேசத்தில் கெப் வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அறுவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த அறுவர் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கெப் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மொனராகலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# விழிப்புணர்வுச் செயலமர்வு



எம். செல்வராஜா

பதுளை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகளுக்கான கொரோனா தொற்று தொடர்பான , விழிப்புணர்வு செயலமர்வு நேற்று (28) ஹப்புத்தளை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுச் சுகாதார சேவை பரிசோதகர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்செயலமர்வில், பொது சுகாதார சேவை பரிசோதகர் சங்கத்தின் உபதலைவர் சுப்ரமணியம் சுதர்ஷன், மேற்படி நோய் தொற்று தொடர்பான விழிப்புணர்வு உரையை ஆற்றினார்.

இதன்போது கலந்து கொண்டவர்களுக்கு விழிப்புணர்வு குறித்த கையேடுகளும் வழங்கப்பட்டன.

# யட்டியாந்தோட்டையில்...

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் யட்டியாந்தோட்டை நகரில் நேற்று முன்தினம் (27) பந்தம் ஏந்திய எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பெரேரா தலைமையில், இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. நூற்றுக் கணக்கான மக்கள் இதில் பந்தங்களை ஏந்தி, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தனர். (என். ஆராச்சி)







### கொடுப்பனவை பெறுவதில்

## அக்கரப்பத்தனை முதியவர்கள் சிரமம்

கே.சுந்தரலிங்கம்

அக்கரப்பத்தனை பகுதியில் முதியோர் கொடுப்பனவு பெற்றுக்கொள்ள வரும் தாம், பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகத் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக, சுமார் 400 க்கும் மேற்பட்ட முதியவர்கள் ஒவ்வொரு மாதமும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அக்கரபத்தனை தபாலகத்துக்கு வருகை தருகின்றனர்.

எனினும், குறித்த கொடுப்பனவை உரிய நேரத்தில் பெற முடியாமல் பலமணிநேரம் வீதியில் காத்திருக்க வேண்டிய நிலைமை உள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.

பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், இந்தக் கொடுப்பனவை பெறுவதற்கு ஓட்டோவுக்கு செலவிட்டு, சிரமங்களுக்கு மத்தியில் வரும் தாம், உரிய முறையில் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தபாலக ஊழியர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், ஒரே நாளில் பலரும் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள வருவதனால், இவ்வாறு காத்திருக்க வேண்டி ஏற்படுவதாகவும் ஊழியர்கள் குறைவாக உள்ளதால் குறித்த கொடுப்பனவை வழங்க தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.



### கொஸ்லாந்தையில்

## கஞ்சா காணி சுற்றிவளைப்பு

பாலித ஆரியவன்ஸ



கொஸ்லாந்தை, கொலங்கொஸ்தென்ன, தும்மலஆர வனப்பகுதியை அண்மித்த பகுதியில் காணப்பட்ட மூன்றரை ஏக்கர் கஞ்சா செய்கை காணிகள் இரண்டு சுற்றிவளைக்கப்பட்டு உள்ளதுடன், சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஒரு காணியில் இரண்டரை அடி உயரமான 3,200 கஞ்சா செடிகள் காணப்பட்டதுடன் மற்றைய காணியில் 2 அடி உயரமான 1,800 கஞ்சா செடிகள் காணப்பட்டன. அவற்றின் ஓரிரண்டு மாதிரிகளை நீதிமன்றத்தில் முன்வைப்பதற்காக வைத்துக்கொண்டு ஏனையவற்றை தீயிட்டு கொளுத்தியதாகவும் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர், கொஸ்லாந்தையைச் சேர்ந்த 39 வயதானவர் என்றும் அவரை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கொஸ்லாந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### எதிர்க்கட்சியை விடவும் ஆளுங்கட்சியே

## அரசாங்கத்தை அதிகமாக விமர்சிக்கிறது

துவாரகஷன், எஸ்.கணேசன்

அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களே, இந்த அரசாங்கத்தை விமர்சனம் செய்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன், இன்று எதிர்க்கட்சியைவிட அரசாங்கத்தை அதிகம் விமர்சனம் செய்வது ஆளும் கட்சியின் அமைச்சர்கள் தான் என்றார்.

இராகலை, சென்.லெனாட்ஸ் தேவாலய மண்டபத்தில் நேற்று (28) நடைபெற்ற கூட்டத்தில் கருத்து தெரிவிக்கின்ற போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அரசாங்கம் எந்தத் திட்டத்தை இன்று முன்வைத்தாலும் அதனை நடைமுறைப்படுத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை பொருட்களுக்கு விதித்தாலும் அதனை யாரும் கண்டு கொள்வதில்லை. உர மூடை 9,000 ரூபாயாக இருக்கின்றது. இந்த விலைக்கு உரத்தை வாங்கி, விவசாயிகள் இலாபம் அடைய முடியுமா? இன்றைய மரக்கறிகளின் விலையை மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதே போல அரிசியின் விலையையும் மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இலங்கைக்கு ஆபத்து ஏற்படும் பொழுது, உதவுவது இந்தியா என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், அதே நேரத்தில் சீனாவும் எங்களுக்கு உதவி செய்கின்றது. அதற்காக அவர்கள் எங்களிடம் இருந்து எதையாவது எதிர்பார்க்கின்றார்கள். அது நடைமுறை. ஏனென்றால், அவர்கள் கடன் கொடுக்கின்ற பொழுது எதனையாவது எதிர்பார்ப்பார்கள். ஏனென்றால், யாரும் யாரையும் நம்பிக் கொடுக்கின்ற ஒரு நிலைமை தற்பொழுது இல்லை.

எனவே, நாம் எமது பொருளாதாரத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக எதையாவது விட்டுக் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமையிலேயே இருக்கின்றோம். எனவே, நாங்கள் அனைவரும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.



### சமுர்த்தி பயனாளிகளில்

## மவுண்டஜின் புறக்கணிப்பு

இரா.யோகேசன்

வட்டவளை பிரதேசத்தை மையப்படுத்தி இடம்பெற்ற சமுர்த்தி பயனாளிகள் தொடர்பான கூட்டத்தில், மவுண்ட்ஜின் தோட்ட மக்கள் அங்கத்துவம் பெறுவதில் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என, அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் இராமசாமி இராஜரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், குறித்த தோட்டத்தில் சமுர்த்தி பயனாளிகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் கூட்டமானது, நோட்டன் சமுர்த்தி காரியாலயத்தின் ஊடாக அதிவிஷேட பாதுகாப்பு துறையினர், பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றது.

இதில் பெருபான்மையினருக்கே முதலிடம் வழங்கப்பட்டதுடன், பெரும்பான்மை இன மக்களே, குறித்த குழுவில் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். இந்தக் குழுவில், மவுண்டஜின் தோட்டம், 101 கொலனி ஆகியவற்றை சேர்ந்த மக்கள் எவரும் இணைத்துக்கொள்ளப்படவில்லை என்பதுடன், திட்டமிட்டே இவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

எனவே, குறித்த தோட்டத்தில் இடம்பெற்றுள்ள புறக்கணிப்பு விடயத்தை கவனத்திற் கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர்கள் உரிய நடவக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை முன்வைத்தார்.

# சாதாரண மக்களின் தலையில் ஏற்றப்படும் மற்றுமொரு சுமை

தேசிய கொள்கைகளின் முக்கியத்துவத்தை இனங்காணாத வரையிலும், சாதாரண பொதுமக்கள் பல பக்கங்களிலும் அடிபட்டுக் கொண்டே இருப்பர். எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதை அடுத்து, ஏனைய பொருட்கள், சேவைகளின் கட்டணங்கள், 'கிடுகிடு'வென அதிகரிக்கப்பட்டன. சில துறைகளைச் சார்ந்தவர்கள் தாம் நினைத்தபடியும், தங்களுடைய கைகளைக் கடிக்காத வகையிலும் விலைகளை ஏற்றிக்கொண்டனர்.

சாதாரண பொதுமக்கள், தமது மூவேளை உணவில், ஓரிண்டு வேளைகளைக் குறைத்துக் கொண்டனர். மத்தியதர வர்க்கத்தினர், அத்தியாவசிய தேவைகளில் கவனத்தைச் செலுத்திக்கொண்டு, ஏனைய சேவைகளை முற்றுமுழுதாகக் கைவிட்டுவிட்டனர்.

இன்னும் சிலர், இருக்கும் தங்க ஆபரணங்களை, அடகு கடைக்கு கொண்டு செல்கின்றனர். அவற்றை, ஒருவருட காலத்துக்குள் மீட்டெடுப்பதற்காக, முன்னர் ஓடிக்கொண்டிருந்ததை விடவும், இரண்டு மடங்கு வேகத்தில் தற்போது ஓடவேண்டியவர்களாய் உள்ளனர். போஷாக்கான உணவு இன்மையால், அவ்வாறானவர்களால் தொடர்ந்து ஓடமுடியாது.

இந்நிலையில், இவ்வருடத்தின் இந்நாள் வரையான காலப்பகுதியில் மட்டும், சுமார் 600 கிலோ கிராம் தங்க ஆபரணங்கள் அடகு வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவையெல்லாம், வருமானத்தை செலவு விஞ்சி நிற்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

மற்றுமொரு தரப்பு, ஒட்டோக்களுக்கும் ஏனைய போக்குவரத்தும் நாளாந்தம் செலவிடும் தொகையை மீதப்படுத்திக்கொள்வதற்கு, இரண்டொரு பஸ் நிறுத்தும் நிலையங்களையாவது கால்நடையாகக் கடந்து சென்றுவிடுகின்றனர். இந்நிலையில்தான் பஸ் கட்டணங்களிலும் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட இருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இது ஏற்கெனவே, சுமக்கமுடியாது தள்ளாடிக்கொண்டிருக்கும் நிலையில், சாதாரண மக்களின் தலைகளில் ஏற்றப்படும் மற்றுமொரு சுமையாகும். ஓட்டோக்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையால், பொதுப் போக்குவரத்துகளை பலரும் நாடினர். அதற்கும் ஆப்பு அடிப்பதைப்போல பொதுப் போக்குவரத்து கட்டணங்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

விலைத்திருத்தங்களை பின்னோக்கி பார்த்தோமெனில், ஒருசில ஆட்சிகளைத் தவிர, ஏனைய ஆட்சிகளில் எல்லாம் திருத்தங்கள் ஏறுமுகத்திலேயே சென்றன; இன்னுமே ஏறுமுகத்தில் நிற்கின்றன. எரிபொருட்களில் விலைகள் அதிகரித்தவுடன், பொருட்கள், சேவைகள் ஆகியவற்றின் விலைகளை அதிகரிப்போர், விலைகளைக் குறைக்கும்போது காதில் கேட்டுக்கொள்வதே இல்லை. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் கணக்கில் எடுத்துக்கொள்வதே இல்லை. ஆக, சாதாரண மக்களே, மத்தளத்தைப்போல இரண்டு பக்கங்களிலும் அடியை வாங்கிக் கொண்டிருக்கின்றனர்.

எதற்கெடுத்தாலும் விலை அதிகரிப்புத்தான் தீர்வு என்றால், ஆட்சியும் நிர்வாகமும் தேவையே இல்லை. தூரநோக்கற்ற நிர்வாகத்தால் மக்களே துன்பப்படுகின்றனர். வாயையும் வயிற்றையும் கட்டிக்கொண்டு வாழத் தெரியாதவர்கள், நாட்டில் இல்லை. யுத்த காலத்தில், அவ்வாறுதான் வாழ்ந்திருக்கின்றனர்.

ஆகையால், ஆட்சியாளர்கள் தேசிய கொள்கையின் முக்கியத்துவத்தை நன்கு விளங்கிக்கொள்ளவேண்டும். அதனூடாகவேனும் விலை அதிகரிப்பு என்பதைக் கைவிட்டு, நிவாரணங்களை வழங்கி, மக்கள் வாழக்கூடிய நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# தமிழ் மக்களின் மனதை சீனா வெல்லுமா?



எம்.எஸ்.எம். ஐயூப்

கடந்த 15ஆம் திகதி, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட சீனத் தூதுவர் கிவி சென்ஹொங், 16ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று, மரபு ரீதியாக மேலாடையின்றி வழிபாடுகளில் ஈடுபட்டார். கடந்த 24ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, திருப்பதிக்குச் சென்று வெங்கடேஸ்வராவை வழிபட்டார்.

இரண்டு தலங்களும் இந்துக்களின் பிரசித்தி வாய்ந்த புனித தலங்களாகிய போதிலும், இருவரினது வழிபாடுகளின் நோக்கங்கள் ஒன்றல்ல. அவற்றில் ஒன்று, தனிப்பட்ட ஆன்மிக விடுதலையை நோக்கமாகக் கொண்டது. மற்றையது, தமது நாட்டின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டது.

சீனத் தூதுவரின் வடமாகாண விஜயத்தின் போது எடுக்கப்பட்டு, அவற்றின் மறைமுக அர்த்தத்தின் காரணமாக வைரலாகிய இரண்டு புகைப்படங்களையும் ஒன்றாக வைத்துப் பார்த்தால், சீனத் தூதுவரின் விஜயத்தின் மூலம் தெரியவரும் இராஜதந்திரத்தின் சுயரூபத்தை விளங்கிக் கொள்ளலாம்.

அவற்றில் ஒன்று, தூதுவரும் அவரது தூதுக்குழுவின் ஆண் உறுப்பினர்களும் மேலாடையின்றி நல்லூர் கோவில் வளவில் நிற்க்கும் காட்சியைக் கொண்டதாகும். மற்றையது, பருத்தித்துறையில், அக்குழுவினர் பின்னணியில் இருக்க, சீன அதிகாரியால் இயக்கப்பட்ட 'ட்ரோன்' விமானம் பறக்கும் காட்சியைக் கொண்டதாகும்.

வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் போன்றோர் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்வது ஒன்றும் புதிய விடயம் அல்ல. ஆனால், சீனத் தூதுவர் ஒருவர், மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு, வடமாகாணத்துக்கு குறிப்பாக, யாழ்ப்பாணத்துக்குச் சென்றதாக எமக்கு ஞாபகத்துக்கு வரவில்லை.

அத்தோடு, சீனத் தூதுவரின் இந்த விஜயம், ஊடகங்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு, சுமூகமானதல்ல என்பது, சகலரும் அறிந்த விடயமாகும்.

அவ்வாறிருக்க, அண்மையில் இலங்கை அரசாங்கம் வடகடலில் மூன்று தீவுகளில் அமைக்கவிருந்த மின் உற்பத்தித் திட்டமொன்றை, சீன நிறுவனமொன்றிடம் கையளித்து இருந்தது. ஆனால், இந்தியாவினதும் தமிழ் அரசியல் கட்சிகளினதும் எதிர்ப்பின் காரணமாக, அத்திட்டத்தை சீன நிறுவனத்திடம் கையளிக்க அரசாங்கம் மறுத்தது.

இது சீனாவுக்கு ஏமாற்றத்தை மற்றுமன்றி, மனக்கசப்பையும் ஏற்படுத்தியது. எனவேதான், அந்தச் சீன நிறுவனம், மாலைத்தீவில் 12 தீவுகளில் சூரிய ஒளியில் மின் உற்பத்தி செய்யும் திட்டமொன்றுக்கான ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட போது, சீனத் தூதரகம் அதைப் பற்றிய செய்தியில், இலங்கையில் திட்டம் மறுக்கப்பட்டதையும் குறிப்பிட்டு இருந்தது.

இது அவ்வாறு இருக்க, சீனத் தூதுவர் தமது மன்னார் விஜயத்தின் போது, படகொன்றில் இந்திய கடல் எல்லை வரை சென்றுள்ளார். பருத்தித்துறைக்குச் சென்ற தூதுவர், அங்கிருந்த அதிகாரிகளிடம், "இங்கிருந்து இந்தியாவுக்கு எவ்வளவு தூரம்" என விசாரித்துள்ளார்.

இந்தியாவுடனான சீனாவின் உறவின் சுபாவத்தை மக்கள் அறிந்திருக்கும் நிலையில், இதை அவர் பகிரங்கமாக கேட்க வேண்டியதில்லை. அவரது அதிகாரிகளிடம் கேட்டு இருந்தால், அவர்கள் கூறியிருப்பார்கள். தெரியாவிட்டால், உடனடியாக இணையத்தில் அதைத் தேடி, அவரிடம் கூறியிருப்பார்கள். அது ஒன்றும் தேவையில்லை; அவர் ஒரு நாட்டின் தூதுவர் என்ற வகையில், தாம் கடமையாற்றும் நாடான இலங்கையின் புவியியல் விவரங்களை நிச்சயமாக அறிந்தருப்பார். அதன்படி, இலங்கையின் வட கோடியான பருத்தித்துறைக்கும் தமது நாட்டின் அரசியல் எதிரிகளில் அல்லது போட்டியாளர்களில் முக்கியமான நாடான இந்தியாவுக்கும் இடையிலான தூரத்தை, அவர் கொழும்பில் இருந்து புறப்படும் முன்னரே நிச்சயமாக அறிந்திருப்பார். ஆனால், இந்தியாவைச் சம்பந்தப்படுத்தி எதையாவது கூறி, இந்தியாவைப் பற்றிய தமது கவனத்தை வெளிக்காட்டுவதே அவரது நோக்கமாக இருந்திருக்கலாம்.

உண்மையிலேயே, சீனத் தூதுவர் ஒருவர், இந்தியாவைப் பற்றி அவ்வாறான சிறிய கேள்வியொன்றைக் கேட்டாலும் அது, ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனெனில், அதில் அரசியல், இராணுவ தந்திரோபாய அர்த்தமொன்று மறைந்திருக்கலாம் என்பதாலாகும்.

'ட்ரோன்' விமானங்களும் பெரும்பாலும் பாதுகாப்புப் பணிகளில் உபயோகிக்கப்படும் வானூர்தி வகையொன்றாகும். சீனத் தூதுவர் முன்னிலையில், சீன அதிகாரி ஒருவர் இந்தியாவை முன்னோக்கி இருந்து, 'ட்ரோன்' ஒன்றைப் பறக்கவிடுவதிலும் ஒரு செய்தி மறைந்திருக்கிறது என்று ஊகிக்கலாம்.

எனவே, வடபகுதிக்கான சீனத் தூதுவரின் இந்த விஜயம், இந்தியாவை ஆத்திரமூட்டுவதாக இருந்ததாக, சில அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஜெனீவாவில் ஐ.நாவுக்கான இலங்கையின் தூதுவராக இருந்த கலாநிதி தயான் ஜயதிலக்க, அந்த விஜயம் ஆத்திரமூட்டுவதாக இருந்ததாகவும் அரசாங்கம் அதற்கு இடமளித்து இருக்கக் கூடாது என்றும் ஊடகங்களிடம் கூறியிருந்தார்.

சீனத்தூதுவர் தமது விஜயத்தின் போது, யாழ்ப்பாண நூலகத்துக்குச் சென்று சில மடிக்கணினிகளை அன்பளிப்புச் செய்தார். அத்தோடு, வட மாகாணத்தில் கடற்றொழிலை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான தமது விருப்பத்தையும் தெரிவித்தார்.

இவை அனைத்தும், வடபகுதி தமிழ் மக்களைக் கவரும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்றே ஊகிக்க முடிகிறது. இவை, எதிர்காலத்திலும் வடபகுதியில் சில பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சீனாவின் நோக்கத்தையே எடுத்துக் காட்டுகின்றன.

பொது மக்களைக் கவரும் இராஜதந்திரத்தின் முக்கியத்துவத்தை, சீனாவுக்கு உணர்த்தும் சில சம்பவங்கள் அண்மையில் பாகிஸ்தானில் இடம்பெற்றன. சீனாவின் 'ஒரு பட்டியும் ஒரு பாதையும்' என்ற சர்வதேச திட்டத்தின் கீழ், பல நாடுகளில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில், பாகிஸ்தானில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அந்தத் திட்டத்தின் கீழ், குவாதர் என்ற பாகிஸ்தானிய நகரத்தில் பல நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில், குவாதர் அருகே இழுவைப் படகுகள் மூலம் மீன் பிடிக்க, சீன நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியது. அதனையடுத்து, கடந்த ஜூன் மாதம் முதல், அந்த நகரில் பாரிய சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பல இடங்களில் சீனர்கள் கொல்லப்பட்டும் உள்ளனர்.

எனவே, தமது திட்டங்கள் செயற்படுத்தப்படும் பகுதிகளில், பொது மக்களை வென்றெடுப்பதன் முக்கியத்துவத்தை சீனா உணர்ந்திருக்கிறது. ஆனால், இலங்கையில் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவது, சீனாவுக்கு அவ்வளவு இலகுவானதாக அமையாது. அதற்கு சமூக, அரசியல், கலாசார, மானசிகக் காரணங்கள் பல உள்ளன.


இலங்கையில், தமிழ் மக்கள் இந்தியாவைத் தமது இரண்டாவது தாய் நாடாகவே கருதுகிறார்கள். மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை, இந்தியாவையே அவர்கள் தமது பூர்வீக நாடாகக் கருதுகிறார்கள். பொதுவாக, இலங்கை தமிழர்களுக்கு இந்தியாவுடன் மொழி ரீதியாக மட்டுமன்றி, குடும்பம், கலாசாரம் போன்ற வலுவான உறவுகளும், நீண்ட காலமாக இருந்து வருகின்றன. இன்னமும் தமிழ்ப் பகுதிகளில், மகாத்மா காந்தியின் சிலைகளைக் காணலாம். 1960களில், இலங்கையில் சில சீன கம்யூனிஸ்ட்காரர்களின் வீடுகளில், முன்னாள் சீனத் தலைவர் மா சேதுங்கின் உருவப் படங்கள் இருந்தாலும், பொதுவாக இந்தியாவுடனான தமிழ் மக்களின் மானசிக நெருக்கத்தை அது பாதிக்கவில்லை.

1960களில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போரின் போது, ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான தமிழ் மக்கள், இந்தியாவையே ஆதரித்தனர். அதேபோல், இலங்கையின் இனப்பிரச்சினையின் போது, இந்தியா தொடர்ந்தும் தமிழ் மக்களுக்காகப் பரிந்து பேசியது. தமிழ் மக்களுக்குச் சாதகமாக சில தீவிர நடவடிக்கைகளையும் எடுத்தது. இவற்றின் போது, இந்தியா தனது நலன்களை முதன்மையாகக் கொண்டு செயற்பட்டது என்பது உண்மையாயினும், அதனால் இந்தியாவுடனான தமிழ் மக்களின் நெருக்கம் வளர்ந்தது என்பதும் உண்மையே.

புலிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையிலான போரின் போது, இலங்கை அரசாங்கத்துக்கு சில மறைமுகமான உதவிகளை இந்தியா செய்த போதிலும், தொடர்ந்தும் தமிழ் மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தியே வந்துள்ளது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மனித உரிமைகள் மீறல் தொடர்பாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போது, இலங்கை அரசாங்கத்தை சீனா ஆதரித்தே வந்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகளை, ஐ.நா பாதுகாப்புச் சபை ஊடாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனத் தமிழ் தலைவர்கள் கூறினாலும், பாதுகாப்புச் சபையில் சீனா அதற்கு எதிராகத் தமது 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவிக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அண்மையில், இலங்கையில் சீன வேலைத்தளங்களின் பெயர்ப் பலகைகளில், தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமையும் இவற்றோடு சேர்ந்துவிடுகிறது.

எனவே, ஒரு சில பொருளாதார உதவிகளாலோ மக்கள் பயனடையும் வகையிலான சில பொருளாதார திட்டங்களாலோ, தமிழ் மக்களின் மனதை வெல்வது என்பது, சீனாவுக்கு முடியாத விடயம் என்பது தெளிவானதாகும். ஆனால், இலங்கையை பொருளாதார ரீதியாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க, சீனா மேற்கொள்ளும் முயற்சியின் ஓர் அங்கமாகவும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவுக்குச் சவால்விடும் தமது நோக்கத்தின் ஓர் அங்கமாகவும், சிலவேளை வடபகுதியில் மென்மேலும் சீனா உலாவித் திரியலாம்.



## வாழ்வியல் தரிசனம்

ஒவ்வோர் இனத்துக்கும் அவர்கள் சார்ந்த மொழி, சமயம் சார்ந்த கலாசாரப் பண்புகள், அவர்களின் ஆத்மாவோடு இணைந்துள்ளன. இந்த முறைமை உடைக்கப்பட்டால், அவர்களின் தனித்துவம் பறிபோய்விடுகின்றது.

தனது தாய் மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து சென்றவர்கள், தமது கலை, கலாசாரம், மொழி என்பவற்றை விட்டுக்கொடுக்காமல் பற்றுடன் வாழ்கின்றனர். தங்கள் தாய் நாட்டின் உறவுகளுக்குப் பெரும் உதவிகளையும் நல்கிவருகின்றனர்.

ஆனால், காலப்போக்கில் தலைமுறைகள் மாறும்போது, அவர்களின் தாய் மண் மீதான பற்று அப்படியே இருக்குமா என்பது முக்கிய கேள்விதான். வேரோடு பிடுங்கிய செடியை, தங்கள் தாய் மண்ணிலிருந்து விலக்கி, அயல் நாட்டில் நட்டால், அதன் வளர்ச்சி எப்படி அமையப்போகின்றது?

இன்று புலம்பெயர்ந்திருக்கும் எம்மவர்களின் பிள்ளைகளில் அநேகர், தங்கள் தாய் மொழியைப் பேசுவதில்லை; பலர் தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு, தமது தனித்துவத்தையும் அடையாளத்தையும் பெருமையுடன் நிலைநாட்டுவார்கள். சில பெற்றோர், தங்கள் வாரிசுகள் தமிழ் மொழியைப் பேசமாட்டார்கள் எனப் பெருமையுடன் சொல்வார்கள்.

அவர்கள், தமது தாய் மண்ணின் கலாசாரத்தை, அந்நிய நாட்டின் கலாசாரத்துடன் பிணைத்துவிட்டனர். கோடி கொடுத்தாலும் தாய் மண்ணுக்கு நிகராகுமா?

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்


### மழை ஓய்ந்ததும் முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை, மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஓய்ந்துள்ளது. எனினும், மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியிலுள்ள சிறிய குளங்கள் நிரம்பியுள்ள நிலையில், முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி பொதுமக்களும் விவசாயிகளும் தெரிவிக்கின்றனர்.

போரதீவுப் பற்று பிரதேசத்தின் கோவில்போரதீவு, பெரியபோரதீவு பெரியகுளம், வெல்லாவெளி, பொறுகாமம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள குளங்களில், முதலைகளின் நடமாட்டம் அதிகம் காணப்படுவதாகவும், இதனால் அப்பகுதியில் தமது வாழ்வாதாரமாக வளர்த்து வரும் ஆடு, மாடுகள் என்பவற்றை மிகவும் சூட்சுமமான முறையில் முதலைகள் பிடித்து வருவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். முதலைகள், வரட்சிக் காலத்தில் இவ்வாறு சிறிய குளங்களிலிருந்து மட்டக்களப்பு வாவிக்குச் செல்வதும், மழைக் காலங்களில் வாவியிலிருந்து மீண்டும் குளங்களுக்குள் வருவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளன. இவ்வாறு குளங்களுக்கு வரும் முதலைகள், குளங்களில் நீர் அருந்தச் செல்லும் ஆடு, மாடு உள்ளிட்ட வளர்ப்புப் பிராணிகளை தமது உணவாக உண்டு வருகின்றன.

இதுதொடர்பில், பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

-வ. சக்தி



தமிழகம்

# 60 அரச குடியிருப்புகள் அகற்றப்படும்



தமிழ்நாடு முழுவதும் இடிந்து விழும் நிலையிலுள்ள 60 அரசு குடியிருப்புகள் அகற்றபட உள்ளதாக தமிழக வீட்டுவசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “தமிழ்நாடு முழுவதும் உள்ள 193 அரசு குடியிருப்புகளில் 60 இடங்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளன. அந்த 60 குடியிருப்புகளையும் இடித்த விட்டு, புதியதாக வீடுகள் கட்டப்படும். தமிழக அரசு, தரமான குடியிருப்புகளைக் கட்டி கொடுத்தாலும் குடியிருப்பவர்கள் அதை நன்றாகப் பராமரிக்க வேண்டும்” எனவும் அவர் தெரிவித்தார்.

## அதிர்ச்சியில் கங்குலியின் இரசிகர்கள்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ) தலைவருமான சௌரவ் கங்குலிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

2 ஆம் கட்ட தடுப்பூசியை செலுத்திக் கொண்ட கங்குலிக்கு, கொரோனா அறிகுறிகள் ஏற்பட்டதையடுத்து பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே கங்குலிக்குக் கொரோனா தொற்று இருப்பது நேற்று முன்தினம் இரவு (27) உறுதி செய்யப்பட்டது.

இச்செய்தியானது கங்குலியின் இரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அவர் நலமாக இருப்பதாகவும் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒடிசா

பிரசாதம் தருவதாகக் கூறி

## சிறுமி துஷ்பிரயோகம்

### 52 வயதான நபருக்கு ஆயுள் தண்டனை



ஒடிசாவில் நபரொருவர் கோவிலுக்குச் சென்ற 12 வயது சிறுமியிடம் பிரசாதம் தருவதாகக் கூறி, அழைத்து சென்று அவரைப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு, ஒடிசாவைச் சேர்ந்த 12 வயதான சிறுமியொருவர் கோவிலுக்கு சென்றபோது, அங்கே இருந்த 52 வயதான நபரொருவர் அச்சிறுமியிடம் பிரசாதம் தருவதாக அழைத்துச் சென்று, பாலியல் வன்கொடுமை செய்ததாகவும் இதனையடுத்து, அச் சிறுமி இது குறித்துத் தனது பெற்றோரிடம் தெரிவிக்க, அவர்கள் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் குறித்த புகாரின் அடிப்படையில், அச்சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில், நேற்று (28)இவ் வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகாராஷ்ட்ரா

## 23 புலிகள் கொலை

மகாராஷ்ட்ராவில் கடந்த ஆறு மாதங்களில் 23 புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

மராட்டிய சட்டப்பேரவையில் அவர் தாக்கல் செய்த அறிக்கையில் இருந்தே இவ் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த அறிக்கையில் ‘கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாத காலத்தில், வேட்டை, விஷம் வைத்தல், மின்சாரம் பாய்ச்சுதல் மூலமாக 23 புலிகள் கொல்லப்பட்டுள்ளன’ எனத் குறிப்பிடப்பட்டுள்ளது.



## மகாராணி 2 ஆம் எலிசபெத்துக்கு கொலை மிரட்டல்

### சீக்கியரால் பரபரப்பு



பிரிதானிய மாகாராணி இரண்டாம் எலிசபெத்தை, கொல்லப் போவதாக, சீக்கியர் ஒருவர் சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ள ‘வீடியோவொன்று பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மகா ராணி இரண்டாம் எலிசபெத், வின்ட்சர் கேசில் அரண்மனையில் தற்போது வசித்து வருகிறார்.

இந்நிலையில், இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சியின்போது, 1919இல் பஞ்சாபின் அமிர்தசரசில் உள்ள ஜாலியன்வாலா பாகில், சுதந்திரம் கேட்டு போராடியவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனவும் இதற்கு பழிவாங்கும் வகையில், மகா ராணி இரண்டாம் எலிசபெத்தை கொலை செய்ய உள்ளதாகவும் மர்ம நபரொருவர் வெளியிட்ட வீடியோ, பிரித்தானியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது,

மேலும் குறித்த வீடியோவில், அந்நபர் தான் ஓர் இந்திய சீக்கியர் எனவும் தனது பெயர் டார்த் ஜோன்ஸ் என்று தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

> **“ தானோர் இந்திய சீக்கியர் எனவும் தனது பெயர் டார்த் ஜோன்ஸ் என்று தெரிவித்துள்ள நபர், இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சியின்போது, 1919இல் பஞ்சாபின் அமிர்தசரசில் உள்ள ஜாலியன்வாலா பாகில், சுதந்திரம் கேட்டு போராழயவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் வகையில், மகா ராணி இரண்டாம் எலிசபெத்தை கொலை செய்ய உள்ளதாக வெளியிட்ட வீழயோ, பிரித்தானியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது**

புதுச்சேரி

## தடுப்பூசிக்குப் பயந்து மரமேறிய நபர்



நபரொருவர் கொரோனாத் தடுப்பூசியை செலுத்திக் கொள்ளப் பயந்து, மரத்தில் ஏறிய சம்பவம் புதுச்சேரி மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

கோனேரிகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த குறித்த நபர், தடுப்பூசியைச் செலுத்திக் கொள்வதற்கு பயந்து தடுப்பூசி செலுத்தாது நாள்களைக் கடத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், சுகாதார அதிகாரிகள் அவரைத் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு வற்புறுத்தவே, தனக்கு மரம் வெட்டும் வேலை இருப்பதாகக் கூறி உடனடியாக மரத்தில் ஏறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து செவிலியர்அவரை வற்புறுத்தவே, வேண்டுமானால் மரத்தில் ஏறி வந்து ஊசி செலுத்திக் கொள்ளுங்கள் என அவர் பிடிவாதமாக இருந்துள்ளார்.

இதனையடுத்து வேறு வழியின்றி செவிலியர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளதாகவும் இந்நிலையில் இது குறித்து வெளியான காணொளி தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செங்கலடி வீதி திறப்பு





சவூதி அரேபிய நிதி உதவியின் கீழ் 7,200 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட பேராதனை - பதுளை - செங்கலடி (A005) வீதியின் பிபிலையில் இருந்து செங்கலடி வரையிலான 86.7 கிலோ மீற்றர் பகுதி பொதுமக்களின் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது.





## அடையாளங்களை ஆராயும் கண்காட்சி

யாழ்ப்பாணம், தந்தை செல்வா கலையரங்கில், அடையாளங்களையும் வரலாறுகளையும் ஆராயும் கண்காட்சி திங்கட்கிழமை (27) நடைபெற்றது.

அதிகார நிலை, சலுகை, எங்கள் வீதிகளின் வரலாறுகள், கடந்த காலக் கதைகள், ஆவணப்படம், கிளிநொச்சியிலிருந்து கலை, வெவ்வேறு கோணங்களில் கடந்த காலம் உள்ளிட்ட தலைப்புகளில் கண்காட்சி அம்சங்கள் உட்பட கலந்துரையாடலும் இடம்பெற்றிருந்தன.

கண்காட்சியில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, மன்னார் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து எழுத்தாளர்கள், செயற்பாட்டாளர்கள், சமாதான ஆர்வலர்கள் உட்பட துறைசார்ந்தோரும் கலந்து கொண்டனர்.

ஏ.எச்.ஏ. ஹூஸைன்





## கதீஜா கிண்டகார்டனின் வருடாந்த கலை விழா

கதீஜா கிண்டகார்டன் முன் பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் அறிவிப்பாளரும் முன்பள்ளி நிறுவுனருமான அஹமட்லெப்பை அன்ஸார் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக்கும் விசேட விருந்தினராக மல்ஹறுஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.ஐ மதனி, சமூக சேவகர் எம்.ஐ.எம். ஜிப்ரி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் உட்பட பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பாறுக் ஷிஹான்







## வாக்குறுதி நிறைவேற்றம்

கிளனனோர் தோட்டத்துக்கு குடிநீர் வசதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இ.தொ.காவின் உபதலைவரும், பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானின் விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டு, தேர்தல் பிரசாரத்தின் போது, குடிநீர் வசதியை பெற்றுக்கொடுப்பேன் என, செந்தில் தொண்டமான் உறுதிமொழி வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





## தையல் இயந்திரங்கள் வழங்கிவைப்பு

‘சௌபாக்யா’ வேலைத்திட்டத்தின்கீழ், இரண்டு இலட்சம் சமுர்த்தி பயனாளிகளை வலுப்படுத்தும் திட்டத்திற்கமைய காரைதீவில் முதற்கட்டமாக தையல் இயந்திரங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு, காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க கலந்துகொண்டு தையல் இயந்திரங்களை வழங்கிவைத்தார்.

வி.ரி. சகாதேவராஜா



இங்கிலாந்துக்கெதிரான

# ஆஷஸ் தொடரை கைப்பற்றிய அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த அவுஸ்திரேலியா, மெல்பேணில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இரண்டு போட்டிகள் மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியுள்ளது.

நேற்றைய மூன்றாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து, மிற்செல் ஸ்டார்க், ஸ்கொட் போலண்ட், கமரொன் கிறீனிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பற்கொடுத்து, சகல விக்கெட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களையே பெற்று இனிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஜோ றூட் 28 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில், போலண்ட் 6, ஸ்டார்க் 3, கிறீன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக போலண்ட் தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

இங்கிலாந்து: 185/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 50, ஜொனி பெயார்ஸ்டோ 35, பென் ஸ்டோக்ஸ் 25, ஒலி றொபின்ஸன் 22 ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 3/36, நேதன் லையன் 3/36, மிற்செல் ஸ்டார்க் 2/54, கமரொன் கிறீன் 1/7, ஸ்கொட் போலண்ட் 1/48)

அவுஸ்திரேலியா: 267/10 (துடுப்பாட்டம்: மார்க்கஸ் ஹரிஸ் 76, டேவிட் வோணர் 38, ட்ரெவிஸ் ஹெட் 27, மிற்செல் ஸ்டார்க் 24, பற் கமின்ஸ் 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 4/33, ஒலி றொபின்ஸன் 2/64, மார்க் வூட் 2/71, ஜக் லீச் 1/46, பென் ஸ்டோக்ஸ் 1/47)

இங்கிலாந்து: 68/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்கொட் போலண்ட் 6/7, மிற்செல் ஸ்டார்க் 3/29, கமரொன் கிறீன் 1/8)

போட்டியின் நாயகன்: ஸ்கொட் போலண்ட்



## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற ஜீவன் மென்டிஸ்

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக இலங்கையின் ஜீவன் மென்டிஸ் அறிவித்துள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்ட 39 வயதாகும் மென்டிஸ், இறுதியாக இலங்கைக்காக, கடந்த 2019ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரின்போது விளையாடியிருந்தார்.

58 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 22 இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளிலும் மென்டிஸ் விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## 327 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த இந்தியா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 327 ஓட்டங்களை இந்தியா பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், செஞ்சூரியனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 272 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இந்தியா, ககிஸோ றபாடா, லுங்கி என்கிடி, மார்கோ ஜன்ஸனிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 327 ஓட்டங்களையே பெற்றது.

துடுப்பாட்டத்தில், லோகேஷ் ராகுல் 123, மாயங்க் அகர்வால் 60, அஜின்கியா ரஹானே 48, அணித்தலைவர் விராட் கோலி 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், என்கிடி 6, றபாடா 3, ஜன்ஸன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.






## பங்கமாத்தா கரப்பந்தாட்டத் தொடர்: மூன்றாமிடத்தைப் பெற்ற இலங்கை

என். ஜெயரட்னம்

பங்களாதேஷில் நடைபெற்று வந்த பெண்களுக்கான பங்கமாத்தா கரப்பந்தாட்டத் தொடரில் இலங்கை மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது. நேற்று நடைபெற்ற கிர்கிஸ்தானுடனான மூன்றாமிடத்துக்கான போட்டியில் 3-0 என்ற நேர் செட்களில் வென்றே மூன்றாமிடத்தை இலங்கை பெற்றிருந்தது.

தனது அரையிறுதிப் போட்டியில், 24-26, 18-25, 25-20, 25-19, 15-12 என்ற செட் கணக்கில் உஸ்பெக்கிஸ்தானிடம் இலங்கை தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல தொற்றுகள் பரவும்

கொரோனாவில் இருந்து புதிய அவதாரம் எடுத்துள்ள ஒமிக்ரான் வைரஸ் பரவலானது, உலக நாடுகள் பலவற்றை அச்சுறுத்தி வருகின்றது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல நாடுகள் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் இது தொடர்பாக ஐ.நா பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரஸ் கருத்துத் தெரிவிக்கையில், "கொரோனா என்பது மனித இனம் சந்திக்கும் கடைசி பெருந்தொற்று அல்ல. மேலும் பல பெருந்தொற்றுகள் பரவும் . ஆகவே அதனை சமாளிப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். அத்துடன் கொரோனாவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் போதே அடுத்த தொற்றுக்கும் தயாராக இருக்கவேண்டும்" என்றார்.





அமெரிக்கா

## மூளையை உண்பதற்கு முதியவர் கொலை

நபர் ஒருவர், முதியவர் ஒருவரைக் கொலைசெய்து அவரது மூளையை உட்கொண்ட சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் இதாஹோ என்ற மாகாணத்தைச் சேர்ந்தவர் ஜேம்ஸ் டேவிட் ரசல், நரமாமிசம் உண்பதில் ஆர்வம் உள்ளவர். தனது மூளை சுறுசுறுப்பாகச் செயற்பட வேண்டும் என்பதற்காக, அப்பகுதியில் வசித்து வந்த டேவிட் பிளாகெட் என்ற முதியவரைக் கொலை செய்து, அவரின் உடலில் மூளை உள்ளிட்ட பல பாகங்களை உட்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்து கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அப்படையில் ஜேம்ஸ் டேவிட் ரசலை அவரது வீட்டில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் அவரின் வீட்டில் மனித கல்லீரல், நுரையீரல் பாகங்கள், இரத்தம் நிறைந்த கண்ணாடி குவளை, கத்தி, இரத்தக்கறை படிந்த மைக்ரோவேவ் ஓவன் போன்றவை இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஜேம்சை மன நல மருத்துவ சோதனைக்கு அனுப்ப உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதாஹோ மாகாணத்தில் நர மாமிசம் உண்போருக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்படும். ஒருவேளை இந்த வழக்கில் ஜேம்ஸ் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால், இதாஹோ மாகாணத்தில் முதன் முதலாக நரமாமிசம் சாப்பிட்டவருக்கான தண்டனையாக இது இருக்கும் என வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

துபாய்

## வீட்டின் பல்கனியில் துணிகளை உலரவிடத் தடை

டுபாயில் வசிப்பவர்கள் வீட்டின் பல்கனியைத் தவறான முறையில் பயன்படுத்துவற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

டுபாய் நகரின் அழகான தோற்றத்தை பேணுவதற்காகவே இத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பல்கனியில் துணியை உலர விடுதல், சிகரெட் துகள்கள், குப்பைகளை வீசுதல், பறவைகளுக்கு உணவளித்தல், தொலைக்காட்சி அண்டெனா, டிஷ்களை மாட்டுதல் உள்ளிட்ட செயல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதனை மீறுபவர்களுக்கு 500 முதல் 1,500 திர்ஹம் வரை அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



2021 இல் இளைஞர்கள்

## ஆபாசத்தை தேடியதே அதிகம்

2021இல் இளைஞர்கள் அதிகம் தேடியது எவ்வகையான வீடியோக்கள் என்ற பட்டியலை பிரபல ஆபாச இணையதளமொன்று வெளியிட்டுள்ளது.



குறித்த அறிக்கையில், 25- 34 வயதுக்கு உட்பட்டவர்களே அதிகமாக, இணையதளம் மூலம் ஆபாச வீடியோக்களை பார்த்துள்ளனர். அவர்களின் சராசரி வயது 37 ஆக உள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டை விட 18-35 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆபாச படம் பார்க்கும் எண்ணிக்கை 3 சதவீதம் குறைந்துள்ளது எனவும் இளம் வயதினர் (18-24) பிரிவில் மெக்சிகோவைச் சேர்ந்தவர்களும் வயதானவர்கள் (65க்கு மேல்) பிரிவில் உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர்களும் இந்த ஆபாச இணையதளத்தில் அதிகம் பார்த்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் அதிகளவு மக்கள் ஆபாச படங்கள் பார்ப்பதில் தங்கள் நேரத்தை செலவிடுகின்றனர்.

2021ஆம் ஆண்டுக்கான Year in Review பட்டியலை அந்நிறுவனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

## காதலியின் காரை துரத்திச் சென்றவர் மரணம்

காதலியின் காரை திரைப்படப்பாணியில் துரத்திச் சென்ற நபரொருவர் உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் அரிசோனா மாநிலம் போனிக்ஸ் நகரைச் சேர்ந்த குறித்த நபருக்கும் அவரது காதலிக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டிருந்தது. இதனால் ஆத்திரமடைந்த காதலி, அந்நபரைக் கடுமையாகத் திட்டிவிட்டு, தனது காரில் வேகமாகச் சென்றுள்ளார்.

இதனையடுத்து ஆத்திரமடைந்த அந்நபர், காதலியின் காரைத் தடுத்து நிறுத்த ஹொலிவூட் திரைப்படப் பாணியில் தனது காரை வேகமாகச் செலுத்திச் சென்றுள்ளார். இதன்போது, காதலியின் காரின் பின்புறம் பலமுறை மோதியுள்ளார்.

இந்நிலையிலேயே காதலியை முந்திச் செல்ல முயன்ற அவரது கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

பிரித்தானியா

## ஐ-போனுக்காக காத்திருந்தவருக்கு அதிர்ச்சி

ஐ-போனை ஒடர் செய்துவிட்டு அதற்காக ஆவலுடன் காத்திருந்தவர் அதிர்ச்சியில் உறைந்து போன சம்பவம் பிரித்தானியாவில் இடம்பெற்றுள்ளது.

பிரித்தானியாவின் லீட்ஸ் பகுதியைச் சேர்ந்த டேனியல் கரோல் என்பவர் சமீபத்தில் ஒன்லைன் மூலமாக ஐ-போன் 13 பிரோ மேக்ஸ் திறன்பேசியை ஓர்டர் செய்துள்ளார்.

எனினும் அத்திறன்பேசி இரண்டு வாரங்கள் தாமதமாகவே வந்துள்ளது. இதனையடுத்து ஆவலுடன் அதனைப் பிரித்து பாரத்த அவர் இதில் இரண்டு சொக்லேட்டுகள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.




இதன்பின்னர் மீண்டும் குறித்த ஒன்லைன் நிறுவனத்தை தொடர்பு கொண்டு தன்னுடைய புகாரை அளித்துள்ளார்.

தற்போது இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நடைபெற்று வரும் நிலையில் இது குறித்து அந்நபர் வெளியிட்டுள்ள புகைப்படமானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 29 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.